IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.V

(Chapter XXIII Code of Criminal Procedure)

TIRUNELVELI.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC 2518/2022 |
| Deposition Of Witness for | : | PW 3 |
| Name | : | ராமகிருஷ்ணன் |
| Father's/Husband's Name | : | பாலு |
| Village | : | கண்டியபேரி |
| Calling | : | கொத்தனார் |
| Age | : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, this

**04.06.2025**

**(எதிரி ஆஜர். எதிரி வழக்கறிஞர் ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் கண்டியபேரியில் குடியிருந்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். தேதி, வருடம், நேரம் எதுவும் ஞாபகமில்லை. ஒரு நாள் கண்டியபேரி பிள்ளையார் கோவில் தெருவில் நின்று கொண்டிருந்த போது, காவல் துறையினர் எதையோ விசாரித்துக்கொண்டிருந்தார்கள் என்னை எழுதாத பேப்பரில் கையெழுத்து போட சொன்னார்கள். காவல் துறையினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் கையொப்பம் செய்தேன். நான் கையொப்பம் போட்டுவிட்டு அந்த இடத்தை விட்டு சென்றுவிட்டேன். பார்வை மகஜரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்பது எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். (**பார்வை மகஜரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)

RANI K Digitally signed by RANI K Date: 2025.06.04 16:19:24 +0530

போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி அரசு தரப்பிற்கு விரோதமாக சாட்சியம் அளித்ததால் அவரை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசுதரப்பில் கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு நீதிமன்ற அனுமதியுடன் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை –**

நான் போலிஸ் விசாரணையில் கடந்த 11.09.2022 ம் தேதி காலை 10.15 மணிக்கு நானும், பெருமாள் என்பவரும் தெருவில் பேசிக்கொண்டிருந்த போது, அங்கு வந்த போலிசார் சம்பவயிடத்தையும் அதன் சுற்றுப்புறத்தையும் எங்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள் என்றும் அதில் நானும் பெருமாள் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும் கூறியுள்ளேன் என்றாலும், மேற்படி விவரங்களை போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

RANI K

Digitally signed by RANI K
Date: 2025.06.04 16:19:31 +0530